திரு. த. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் பயிற்றுவிக்க முக்கியத்துவம் கொடுக்கிற இந்த அரசு தமிழ் படித்து பல்லாண்டுக் காலமாக வேலையில்லாது இருக்கிற புலவர்களுக்கு வேலை கொடுக்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக்கேள்வி போட்டால் விடை தயாரித்துக் கொடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தமிழ் இலக்கியத்தைப் பாடமாக எடுத்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்குகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களே விரும்பி படிக்கிறபோது அதற்கென்று விசேஷத் தொகையை அரசு தர வேண்டியது இல்லை.

நொய்யல் ஆறு திட்டம்.

கு.கா.வி. எண். 23—

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நொய்யல் ஆறு திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) உடனடியாக ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முற்றுப்பெறும்

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ, ஆ, இ) நொய்யல் அணைத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன் பெறுகிற நஞ்சை நிலம் எவ்வளவு? புஞ்சை நிலம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஆத்துப்பாளையம் அருகே 235·35 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணை ஒன்றும், இரு வாய்க்கால்களும் இந்தத் திட்டத்தில் அடங்குகிறது. இதனால் கரூர் வட்டத்தில் 9,625 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஆயக்கட்டின் ஒரு போக பாசனப் புன்செய் பயிர்களுக்குத் தண்ணீர் அளிக்க இந்தத் திட்டம் வகை செய்கிறது.

[முற்பகல் 9.40.]

திரு. கு. ரமணி : நொய்யல் நதி அதன் ஆரம்ப இடத்திலிருந்து கடைசி வரை கோவை மாவட்டத்தில் ஏராளமான ஏரிகளுக்குத் தண்ணீர் நிரப்பிக்கொடுக்கும்படியான ஒரு சிறந்த காரியத்தை அந்த வற்றாத ஜீவ நதி செய்துகொண்டிருக்கிறது. அதற்கு இந்தத் திட்டம் காரணமாக ஏதாவது இடையூறு ஏற்படுமா? இதனால் அந்தக் குளங்கள் எல்லாம் நிரம்புவதற்கு ஏதாவது குறைகள் ஏற்படுமா? இந்தத் திட்டம் ஆற்றின் குறுக்கே கட்டப்படக்கூடிய அணைக்கட்டுத் திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பழைய கோவை மாவட்டத்திலே இப்போதைய பெரியார் மாவட்டத்திலே சின்ன முத்தூர் கிராமத்தின் அருகில் இந்த அணை கட்ட உத்தேசம் இப்போது அரசின் ஆய்வில் உள்ளது. இங்கே கட்டவேண்டிய அவசியம் பற்றி தலைமைப் பொறியாளர் இரண்டு மூன்று கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே மிக முக்கியமானது, கீழ்ப்பவானி திட்டத்தின் மூலம் கிடைக்கும் கழிவு நீரை தவிர்த்து நொய்யலாற்றின் தடையில்லாத நீர்ப்பிடிப்பிலிருந்து 867 மி. க. அடி நீர் சாதாரணமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எட்டு மாத காலம் கிட்டத்தட்ட கிடைக்கும். பவானி கழிவுநீரைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பும் பெரு மழை பெய்கிற காலத்தில் இரண்டு மாதம் பெருவெள்ளம் வரும் போது அந்த நீர் வீணாகிக் கொண்டிருக்கிறது; எனவே அதையும் பயன்படுத்துவதற்காகத்தான் இந்தத் திட்டமே தவிர ஏற்கனவே பயன்பட்டிருக்கக்கூடிய கண்மாய்கள் எந்தளவிற்கும் பாதிப்பிற்கு உள்ளாக்குவதற்கு இந்தத் திட்டம் துணை நிற்காது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : இத்திட்டத்திற்கான மதி பீட்டுத் தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ரூ. 534 லட்சம் செலவில் இந்தத் திட்டம் கட்டுவதற்கு இருக்கிறது. தலைமைப் பொறியாளர் ஆய்வு செய்து செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார். இப்போது அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அரசு முடிவு எடுத்ததும் திட்டப்பணிகள் அதன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு: நீண்ட காலமாகப் பேசப்பட்டு வரும் இத்திட்டம் இன்னும் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் ஆய்வு மாநில அளவில் மட்டும்தான் இருக்கிறதா? அல்லது எப்போதாவது மத்திய அரசுக்கு இது அனுப்பப்பட்டு அவர்கள் ஏதாவது தங்கள் குறிப்புகள் எழுதி திருப்பி அனுப்பி மீண்டும் அது ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 17]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இது மாநில அரசின் ஆய்வில்தான் இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி: இந்த நொய்யல் ஆற்றுத்திட்டம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் கரூர் பகுதியில் கட்டப்படுகிறது என்று சொன்னால் எங்களைப் போன்றவர்களுக்கு இத்திட்டத்தினால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பவானிசாகர் நீர்த்தேக்கத்திலிருந்து எங்களை ஏமாற்றி நொய்யல் ஆற்றில் கரூரில் கட்டப்படுகிற நிலை ஏற்பட்டால் பவானிசாகர் ஆற்றிலிருந்து அவனாசி தாலுகாவிற்கு தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கீழ் பவானி அணையிலிருந்து வெளியே வருகிற கழிவுநீரைப் பயன்படுத்திக் கொள்வது என்பதும், பருவமழை காலத்தில் அதிகமாக மழை பெய்து வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறபோது அது வீணாகிக் கொண்டிருக்கிறதே என்று அதைப் பயன்படுத்தி கரூர் வட்டத்தில் இத்திட்டத்தின்மூலம் பயன் அளிக்கவேண்டும் என்று நீண்ட காலமாக அப்பகுதி மக்களின் கோரிக்கையை மனதில்கொண்டு இப்போது ஒரு இறுதி முடிவு எடுக்கக்கூடிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். மற்றப்படி கீழ் பவானி நீரை அப்பகுதியிலுள்ள மக்களுக்குத்தான் கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. கோ. கிருஷ்ணசாமி: காங்கேயம் தொகுதி சென்னிமலைப் பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஒடப்பாளையம் ஊரில் சர்வே செய்யப்பட்டது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி நொய்யல் ஆறைப் பற்றியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களது வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தங்களது 21 அம்ச கோரிக்கைகளுக்காக 15-7-80 முதல் வேலை நிறுத்தம் செய்திருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்று கேட்டு

1. திரு. இரெ. இராசமாணிக்கம்,